யா/ ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை.
# J/ Hartley College, Point Pedro.

முதலாம் தவணைப் பரீட்சை – 2020 – தரம் 11
## First Term Examination – 2020 – Grade 11

| | | | | |
|---|---|---|---|---|
| கிறிஸ்தவம் I, II<br>Christianity I, II | 15 | T | I, II | மூன்று மணித்தியாலம்<br>Three Hours |

சுட்டெண் Index No

## கிறிஸ்தவம்

பகுதி I

**மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

**அ. 1 தொடக்கம் 10 வரையுள்ள விகாக்களுக்கு சரியான அல்லது மிகச் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01. மெசியா என்பதன் பொருள்

1. இறைவாக்கினர் 2. இறைமகன் 3. அரசன் 4. அருள் மொழிவு பெற்றவர்

02. " ஒரு குழந்தை நமக்கு பிறந்துள்ளார் ஓர் ஆண் மகவு நமக்கு தரப்பட்டுள்ளார் ஆட்சிப்பொறுப்பு அவர் தோள் மேல் இருக்கம் எனக்கூறிய இறைவாக்கினர்

1. எசாயா 2. எரேமியா 3. மிக்கா 4. எசேசக்கியேல்

03. நல்லாயரின் பண்புகளழன் சரியானது

1. போசணை ஊட்டல்
2. வழிநடத்துதல், பராமரித்தல், தேடிக்கண்டு பிடித்தல்
3. பாதுகாத்தல், வாழ்வை அர்ப்பணித்தல்
4. மேற்கூறிய மூன்றும் சரயானது

04. நல்ல ஆயர் பணியை நிறைவேற்றும் வண்ணமாக இறைவன் யாரை ஒரே ஆயனாய் அமர்த்தினார்

1. தானியேல் 2. தாவீது 3. ஆபிரகாம் 4. பேதுரு

05. ஐரேனியா என்னும் கிரேக்கச் சொல்லின் பொருள்

1. முழுமையான சமாதானம் 2. முழுமையான விடுதலை
3. முழுமையான இரக்கம் 4. முழுமையான அன்பு

06. இயேசுவின் வாழ்வு,பணி, துன்புறுத்தல், மரணம், மூலம் நீர் அறிந்து கொள்ளும் அன்பு

1. தொண்டு பெறும் அன்பு 2. கடமை அன்பு
3. தியாக அன்பு 4. துன்புறும் அன்பு

07. ஆண்டவர் அழைத்தவுடன் அவனது தாய் நாடு தந்தையின் வீடு, உறவினர், உடமைகள், அனைத்தையும் விட்டுப் புறப்பட்டவர் யார்

1. தாவீது 2. சவுல் 3. ஆபிரகாம் 4. எரேமியா

08. ஆண்டவர் அளித்தார் ஆண்டவர் எடுத்துக் கொண்டார் ஆண்டவர் பெயர் போற்றப் பெறுக என விசுவாச அறிக்கை செய்தவன்

1. தாணியேல் 2. பவுல் 3. தாவீது 4.யோபு

09. ஆடுகளுக்காக எனது உயிரைக் கொடுக்கிறேன் என்ற கூற்று

1. ஆயர் அன்பு 2. அர்ப்பணிப்பு 3. பணிநிலை 4. மேற்கூறிய மூன்றும் சரி

10. “ நான் ஆடுகள் வாழ்வைப்பெறும் பொருட்டு அதவும் நிறைவாகப் பெறும் பொருட்டு வந்துள்ளேன்….” என்று கூறும் வேதப்பகுதி

1. யோவான் 10:10  2. மத்தேயு3:8  3. திருப்பாடல் 23:3  4. லூக்கா 4:2

$(10 \times 1 = 10)$

**ஆ. இறை வார்த்தையை பூர்த்தி செய்க**

01. அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர் ஏனெனில் …………………………………………….

02. ஒருவருக்கொருவர் தயவாகவும் மன உருக்கமாகயும் இருந்து கிறிஸ்து தேவன் ……………………………………………………………………………………………...

03. “ கூலிக்கு மேய்ப்பவர் ஓநாய் வருவதைக்கண்டு ஆடுகளைவிட்டு விட்டு ஓடிப்போவார் ……………………………………………………………………………………………

04. அன்பு நீடிய சாந்தமும் தயவுள்ளது …………………………………………………

05. நீதி அவருக்கு அரைக்கட்டும் ……………………………………………………………

$(5 \times 2 = 10)$

**இ. சுருக்கமான விடை தருக.**

01. அன்பில் உள்ள தலைசிறந்த பண்புகள் 2 தருக?
02. ஆபிரகாமின் அறை ஆசியில் உள்ள மூன்று உறுதிப்பாட்டினையும் தருக?
03. நல்லாயரின் பண்புகள் 3 தருக?
04. கிறிஸ்தவனாகிய நீர் ஆயராக செயற்படும் முறை மூன்று தருக?
05. “ நீர் மெசியா. வாழும் கடவுளின் மகன்” சந்தர்ப்பம் கூறுக?
06. நான் கிறிஸ்தவ மதகுரு நான் ஆண்டவரை வழிபடுகின்றேன் நான் மக்களின் வாழ்வை நேசிக்கின்றேன் கொலை செய்தலை நான் வெறுக்கின்றேன் எனக் கூறிய ஊழியர் யார்?
07. தீய ஆயரின் பண்புகள் பண்புகள் 03 தருக?
08. துன்புறும் ஊழியன் பற்றி இறைவாக் உரைத்த இருவரைக் குறிப்பிடுக?
09. பத்துகக் கட்டளைகள் பற்றி வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள நூல் எது?
10. மனினுக்கும் இறைவனுக்கும் இடையிலான உறவையும் கடமைகளையும் குறிப்பிடும் கட்டளைகள் எவை?

$(10 \times 2 = 20)$

## பகுதி II

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. நல்லாயர் தன் ஆடுகளை பேணிக்காப்பர்
   1. ஆயர் என்பதன் பொருள்? புதிய ஏற்பாட்டின் ஆயர் யார்?
   2. நல்லாயரை வெளிப்படுத்தும் வேதாகம குறிப்பு 03 எடுத்துக்காட்டுக?
   3. நாம் எப்படி ஆடுகளாக செயற்பட வேண்டும் எனக் குறிப்பிட்டு விளக்குக?

$(2 + 3 + 5 = 10)$

02. இறைவனிடம் உறுதியான விசுவாசத்தை கட்டியெழுப்பினார்.
   1. விசுவாசத்தின் தந்தை யார்?
   2. ஆபிரகாமின் அழைப்பில் காணப்படும் சிறப்பு பண்பு மூன்றினைத் தருக?
   3. ஆபிரகாமின் அழைப்பில் இருந்தும் அவரது விசுவாச வாழ்வின் மூலமும் நீர் பெறும் படிப்பினைகளை எடுத்துக்காட்டுக?

$(2 + 3 + 5 = 10)$

03. ஆண்டவரின் சாட்சிகளாக வாழ்ந்தவர்களே துன்புறும் பணியாளர்

1. துன்புறும் ஊழியன் பற்றி இறைவாக்கு உரைத்த இறைவாக்கினர்கள் இருவரைக் குறிப்பிடுக?
2. துன்புறும் பணியாளன் பற்றி எசாயா இறைவாக்கினர் கூறும் பண்புகளை குறிப்பிடுக?
3. “ ஆண்டவரே இயேசு எமது துன்பங்களை சுமந்தார் “ என்பதனை விளக்குக?

$(\mathbf{2+3+5=10})$

04. மெசியாவில் நிறைவான வாழ்வு கிடைக்கும்.

1. மெசியா என்ற பதத்தை எபிரேய,கிரேக்க மொழிகளில் எவ்வாறு அழைப்பர்
2. மெசியா எனப்படும் கிறிஸ்துவின் மூலம் நாம் முழுமையான வாழ்வை பெற கிடைக்கும் பண்புகள்
3. மெசியாவின் வாழ்வில் இருந்து நீர் பெறும் படிப்பினைகள் விளக்குக?

$(\mathbf{2+3+5=10})$

05. பகைவரை மன்னியுங்கள்

1. இயேசு மன்னித்த சம்பவங்கள் இரண்டினை தருக?
2. மன்னிக்க மறுத்த பணியாள் உவமையில் கிடைக்கும் முன்மாதிப் பண்புகளைப குநிப்பிடுக?
3. கிறிஸ்தவனாகிய நீர் எவ்வாறு மன்னிப்பை அளித்து இயேசுவைப் போல் முன்மாதிரியாக வாழ்வீர்?

$(\mathbf{2+3+5=10})$

06. சமாதானம் எமக்கு சுதந்திரம் மற்றும் மனதுக்கு ஆறுதல் தரும்

1. யார் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவார்? யாருக்கு விண்ணரசு கிடைக்கும்?
2. இயேசு நீதியுடன் கூடிய சமாதானத்தை இவ்வுலகிற்க பெற்றுக்கொடுத்தார். இது இயேசு உலகில் அவதரிக்கும் யாரால் கூறப்பட்டது அவற்றை குறிப்பிட்டு விளக்குக?

$(\mathbf{5+5=10})$